# மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை

(1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சட்டத்தினால் கூட்டிணைப்புச் செய்யப்பட்டது)

## பதவி வெற்றிடங்கள்

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை அலுவலகத்தில் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக கீழ்க் குறிப்பிடப்படுகின்ற தகைமைகளைக் கொண்ட இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) **பாதுகாப்பு உதவியாளர் - வகுப்பு 111 – MA 1-2 (வெற்றிடங்கள் 02)**

தகைமைகள்

வெளிவாரியான விண்ணப்பதாரிகள்

கல்வித்தகைமைகள்:

(அ) கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில்

i. சிங்களம் / தமிழ்
ii. கணிதம்
iii. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உ/த) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (பொது அறிவுப் பரீட்சை தவிர) பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

(இ) பதவிக்கான விசேட ஏனைய தகைமைகள்

i. மேலே ''அ'' பந்தி முதல் ''ஆ'' பந்தி வரை உள்ள தகைமைகள் அல்லது முப்படை அல்லது பொலிஸ் சேவையில் 05 வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது அரச/தனியார் நிறுவனம் ஒன்றில் 05 வருட சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

ii. உடல் தகைமை ஆண்: - உயரம் 5' 2'' மார்பு 32''

பெண்: - உயரம் 5'

**உள்ளக விண்ணப்பதாரிகள்:**

(அ) ஆரம்ப – மட்டம் - திறன் சாராத மற்றும் திறன் சார் சேவைப் பிரிவில் கீழே ''ஆ'', ''இ''மற்றும் ''ஈ'' பந்திகளில் குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய ஊழியர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில்

i. சிங்களம் / தமிழ்
ii. கணிதம்
iii. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(இ) சேவையில் நிரந்தர நியமனம் பெற்றிருக்க வேண்டும் என்பதோடு அந்நியமனத்தில் சேவை உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(ஈ) உரிய திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 05 வருடங்கள் தொடராக திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**வயது**: விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரியான விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாமாட்டாது.

**சம்பள அளவுத்திட்டம்**: MA 1-2 - ரூ.46,220/= 10x540 – 7x630 – 12x1, 080 – 12x1, 280 – 84,350/=

ஆரம்ப அடிப்படைச் சம்பளம்: ரூ. 43,312/-(2026)

(மேலே குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் (DMS) சுற்றறிக்கை இல. 1/2025 இற்கு ஏற்ப தரப்பட்டுள்ளது என்பதோடு இந்த அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஆரம்ப சம்பளப்படி 2027.01.01ஆம திகதியிலிருந்து செயற்படுத்தப்படும். சொல்லப்பட்ட அடிப்படைச் சம்பளத்துக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்).

குறிப்பு: பாதுகாப்பு உதவியாளர் பதவிக்கு ஓய்வுபெற்ற முப்படை ஊழியர்கள் பாதுகாப்பு உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிப்பதாயின், அவர்களின் ஓய்வூதியத்திலிருந்து அவர்கள் பெறும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு கழிக்கப்படும், மீதமுள்ள தொகை மட்டுமே நிறுவனத்தால் வாழ்க்கைச் செலவாக செலுத்தப்படும். இது அவ்வப்போது அரசாங்கத்தால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் நிதி விதிமுறைகளால் நிர்வகிக்கப்படும்.

## 2. <u>சாரதி III தரம் - PL 3 (வெற்றிடம் 1)</u>

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

I) கல்வித் தகைமைகள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தர) பரீட்சையில் குறைந்தது இரண்டு முறைக்கு மேற்படாமல் இரண்டு (02) திறமைச்சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

II) தேர்ச்சி

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தலைமை அதிபதியால் வெளியிடப்பட்ட கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும். சுாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் சாரதி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**<u>உள்வாரி விண்ணப்பதாரர்கள்:</u>**

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட கனரக வாகன சாரதி உரிமத்தைப் பெற்றிருக்க வேண்டும். சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் சாரதி அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

முதன்மை (திறன் சாராத) (PL 1) சேவைப் பிரிவில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

வயது: விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரியான விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாமாட்டாது.

சும்பள அளவுத்திட்டம்: PL 3 - ரூ. 43,280/= 10x490 – 10x540 – 10x590 – 12x630 – 67,040/=

ஆரம்ப அடிப்படைச் சம்பளம்: ரூ. 40,834/-(2026)

(மேலே குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் (DMS) சுற்றறிக்கை இல. 1/2025 இற்கு ஏற்ப தரப்பட்டுள்ளது என்பதோடு இந்த அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஆரம்ப சம்பளப்படி 2027.01.01ஆம ˙திகதியிலிருந்து செயற்படுத்தப்படும். சொல்லப்பட்ட அடிப்படைச் சம்பளத்துக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்).

**<u>பொது நிபந்தனைகள்</u>**

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும்

I. இலங்கை பிரசையாக இருக்க வேண்டும்.

II. பதவிக்கான கடமைகளைப் புரிவதற்கான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) சகல பதவிகளும் நிரந்தரமானதாகும் என்பதோடு ஓய்வூதியத்துக்கு உரித்தற்ற மற்றும் இடமாற்றல் அற்றதாகும்.

(இ) சகல விண்ணப்பதாரிகளும் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு பின்னர் தெரிவு செய்யப்படுவர்.

(ஈ) **ஊழியர் சேமலாப நிதியம்**: ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஊழியரின் அடிப்படைச் சம்பளத்தின் 10% சதவீதம் பங்களிப்புச் செலுத்துகின்ற அதேநேரம் தொழில் தருனரினால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 12% சதவீதமும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% சதவீதமும் பங்களிப்புச் செய்யப்படும்.

(உ) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரி மருத்துவ/ திடீர் விபத்துக் காப்புறுதி திட்டத்துக்கும் உரித்துடையவராவார்.

(ஊ) மேலே சொல்லப்பட்ட தகைமைகள் மற்றும் பதவியுடன் தொடர்புடைய அனுபவங்கள் தொடர்பிலான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். (அவ்வாறு சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்).

மேலே குறிப்பிட்ட விடயங்கள் உள்ளடங்கிய விண்ணப்பதாரி தொடர்பில் விசாரிக்கக் கூடிய உறவினர் அல்லாத இரண்டு நடுவர்களின் பெயர்கள், முகவரிகள், தொடர்பு இலக்கங்களையும் குறிப்பிட்ட முழுமையான சுய விபரம் ஒன்றை உள்ளடக்கிய விண்ணப்பத்தை 2026.04.22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பிக்கின்ற பதவியின் பெயரை விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் முலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பிரதம நிறைவேற்று அதிகாரி/மார்ஷல்,
மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை
த.பெ.இல:223,
புதுக்கடை
கொழும்பு 12.